

பெரம்பலூர் மாவட்டம், கை.களத்தூர் முதல் பெரம்பலூர் வரையிலான கூடுதல் நடைக்கான பேருந்து சேவையினை, போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார். இதில், மாவட்ட ஆட்சியர் கிரேஸ் பச்சாவ், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர்,நூருல்ஹிதா இஸ்மாயில், ஒன்றிய செயலாளர்கள் எஸ்.நல்லதம்பி, ந.ஜெகதீஷ்வரன் மற்றும் பலர் உள்ளனர்.



தஞ்சை வடக்கு மாவட்டம், திருவிடைமருதூர் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பாக ஒன்றிய செயலாளர் கூகூர் சி.அம்பிகாபதி தலைமையில் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டத்தில் தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, முன்னாள் எம்.பி செ.இராமலிங்கம், சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, தலைமைக் கழக பேச்சாளர் ராஜராஜேஸ்வரி, உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கரூர் மாவட்டம் முழுவதும்

# ‘திராவிட மாடல்’ முதல்வர் பிறந்த நாளை சிறப்பாகக் கொண்டாடுவோம்!

## மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம் – அமைச்சர் வி.செந்தில்பாலாஜி அறிவிப்பு!



கரூர், பிப். 25 -

கரூர் மாவட்டம் முழுவதும் திராவிட மாடல் நாயகர் முதல்வர் பிறந்த நாளை சிறப்புடன் கொண்டாடுவோம் என கரூர் மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

கரூர் மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் 23.02.2025 அன்று கரூர் மாவட்டக் கழக அலுவலகம், (கலைஞர் அறிவாலயம்) தளபதி அரங்கத்தில் கரூர் மாவட்ட கழக அவைத் தலைவர் டி. ராஜேந்திரன் தலைமையில், நடைபெற்றது. கரூர் மாவட்டக் கழக செயலாளரும், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சருமான வி.செந்தில்பாலாஜி சிறப்புரையாற்றினார்.

கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் கே.சி.பழனிச்சாமி, கழக நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், கழக சட்டத்துறை இணைச் செயலாளர் என்.மணிராஜ், கழக நெசவாளர் அணி செயலாளர் பரணி கே. மணி, கழக கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர் முனவர் ஜான், கழக வர்த்தக அணி துணைச் செயலாளர் வே.பல்லவிராஜா, கழக தொழிலாளர் அணி துணை செயலாளர் பி.விஜயக்குமார், குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா. மாணிக்கம், அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர்.இளங்கோ, கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க.சிவகாமசுந்தரி, கரூர் மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர், கரூர் மேற்கு பகுதி செயலாளர் தாரணி பி.சரவணன், மாவட்டக் கழக துணை செயலாளர்கள், எம்.எஸ். கே.கருணாநிதி, பூவை ரமேஷ்பாபு, மகேஸ்வரி சுப்பிரமணி, மாவட்ட கழக பொருளாளர் பி.வி. பரத், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சுப. ராஜகோபால், அ.சிவராமன், காலனி செந்தில், ஜி.பாலகுருபரன், எம். துரைராஜ், கே.சுப்பிரமணி கழக பொதுக்குழு உறுப்பினர்கள் வி.கருப்பண்ணன், என்.எஸ்.ஆறுமுகம், கே. வேலுச்சாமி, விகே.டி.ராஜ்கண்ணு, பி.பி.சரவணன், சி.கருப்பையா (எ) தர்மர், கே.சாமிநாதன், ஈ.ஜாபருல்லா, ஏ.நஞ்சுண்டேஸ்வரன், ச.சிவகாமி சண்முகம், எம்.சிவசாமி, எஸ். காளியப்பன், என்.ராமலிங்கம், பி.சிவகாமசுந்தரி, கலாவதிசக்திவேல், பி.ஏ.குமார், கரூர் மாநகர செயலாளர் எஸ்.பி.கனகராஜ், கரூர் வடக்கு பகுதி செயலாளர் கரூர் கணேசன், கரூர் தெற்கு பகுதி செயலாளர் க.சுப்பிரமணியன், கரூர் மத்திய கிழக்கு பகுதி செயலாளர் ஆர்.எஸ்.ராஜா, கரூர் மத்திய மேற்கு பகுதி பொறுப்பாளர் ஆர்.ஜோதிபாசு, கரூர் மத்திய பகுதி பொறுப்பாளர் வி.ஜி.எஸ். குமார், அரவக்குறிச்சி மேற்கு ஒன்றிய செயலாளர் எம்.எஸ்.மணியன்,

அரவக்குறிச்சி கிழக்கு ஒன்றிய செயலாளர் என். மணிகண்டன், க.பரமத்தி தெற்கு ஒன்றிய செயலாளர் கே.கருணாநிதி, க.பரமத்தி வடக்கு ஒன்றிய செயலாளர் த.கார்த்திக், கரூர் மேற்கு ஒன்றிய செயலாளர் சி.வளர்மதி, கரூர் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் வி.கே.வேலுச்சாமி, கரூர் கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் ப.முத்து க்குமார், தாந்தோணி கிழக்கு ஒன்றிய செயலாளர் எம். ரகுநாதன், தாந்தோணி மேற்கு ஒன்றிய செயலாளர் கே.பாஸ்கரன், கிருஷ்ணராயபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் கே.ரவிராஜா, கடவூர் வடக்கு ஒன்றிய செயலாளர் எம்.ராமலிங்கம், கடவூர் தெற்கு ஒன்றிய செயலாளர் கே. வீரா சாமி (எ) சுதாகர், கடவூர் மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் என்.செல்வராஜ், கிருஷ்ணராயபுரம் கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் சி.கதிரவன், கிருஷ்ணராயபுரம் தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் எல். கரிகாலன், குளித்தலை கிழக்கு ஒன்றிய செயலாளர் அ.சந்திரன், குளித்தலை மேற்கு ஒன்றிய பொறுப்பாளர் ப.தியாகராஜன், தோகைமலை மேற்கு ஒன்றிய செயலாளர் இ.ராமர் (முன்னாள் எம்எல்ஏ), தோகைமலை கிழக்கு ஒன்றிய செயலாளர் ஜி.அண்ணாதுரை, பள்ளப்பட்டி நகர பொறுப்பாளர் அ.வாசிம் ராஜா, புகழூர் நகர செயலாளர் ஏ.குணசேகரன், புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூர் செயலாளர் க.முரளிராஜா, புலியூர் பேரூர் செயலாளர் கா.அம்மையப்பன், உப்பிடமங்கலம் பேரூர் செயலாளர் சி.தங்கராஜ், கிருஷ்ணராயபுரம் பேரூர் செயலாளர் எம்.சசிக்குமார், பழைய ஜெயங்கொண்டம் பேரூர் செயலாளர் ஆர்.மோகன்ராஜ், மருதூர் பேரூர் செயலாளர் இ.ரவீந்திரன், நங்கவரம் பேரூர் செயலாளர் எம்.முத்து (எ) சுப்பிரமணி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.நாகரத்தினம், பி.காமராஜ், எஸ்.காமராஜ், ஏ.அறிவழகன், கீதா மணிவண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

திராவிட மாடலென, திக்கெட்டு திசையும் வியக்க ஆட்சிபுரியும், சமூகநீதி, சமத்துவம், சகோதரத்துவம், சுயமரியாதை காத்திடும் மாபெரும் மக்கள் பேரியக்கமாம். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர், திராவிட நாயகர் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு தளபதி அவர்களின் 72வது பிறந்த நாள் விழாவை கரூர் மாவட்டக் கழகம், மாநகர, பகுதி, நகரம், ஒன்றிய, பேரூர், வட்ட, கிளைக் கழகங்கள் அனைத்து சார்பு அணிகள் சார்பில் 72 தொடர் நிகழ்ச்சிகள் நடத்தி சிறப்பாக கொண்டாடுவது எனக் இக்கூட்டம் தீர்மானிக்கிறது. கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு கரூர் மாவட்டக் கழகம், மாநகர, பகுதி, நகரம், ஒன்றிய, பேரூர், வட்ட, கிளைக் கழகங்கள் சார்பில் நலத்திட்ட உதவிகள், மாணவ மாணவிகளுக்கு நோட்டு புத்தகம் வழங்குதல், உணவு வழங்குதல், பொதுக்கூட்டம் நடத்துவது எனக் இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

கரூர் மாவட்ட தி.மு.க. சார்பில் 02.03.2025 அன்று கரூர் மாவட்டத்தில் உள்ள 157 ஊராட்சிகள், 48 மாநகராட்சி வார்டுகள், 3 நகராட்சிகளில் 21 வார்டுகள், 8பேரூராட்சிகளில் 24 இடங்கள் என மொத்தம் 250 இடங்களில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனித்தனியே ஓட்டபந்தயம், கயிறு இழுத்தல், சைக்கிள் மிதவேகம், மியூசிக் சேர் ,மியூசிக் பால், பானை உடைத்தல், பாட்டிலில் நீர் நிரப்புதல் உள்ளிட்ட போட்டிகள் நடத்தப் பட்டு வெற்றி பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப் பட்டும்.

02.03.2025 மதியம் 3.00 மணியளவில் அரசு காலனி பகுதியில் அதிவேக சைக்கிள் போட்டிகள் ஆண்கள் பெண்களுக்கு தனித்தனியாக நடத்தப்படும்.

மாலை 6.00 மணிக்கு கரூர் 80 அடி சாலையில் திண்டுக்கல் ஐ.லியோனி நடுவராக பங்கேற்கும் பட்டிமன்றம் நடத்துவது என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

09.03.2025 அன்று கரூர் மாவட்டத்தில் 157 ஊராட்சிகள், 48 மாநகராட்சி வார்டுகள், 75 நகராட்சி வார்டுகள், 123 பேரூராட்சி வார்டுகள் என மொத்தம் 403 இடங்களில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு பெண்கள் மட்டும் பங்கேற்கும் கோலப்போட்டி நடத்திடவும் அதில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் சிறப்பு பரிசுகள் வழங்குவது எனவும் முதல், இரண்டு, மூன்றாவது பரிசு பெறுபவர்கள் மாவட்ட அளவில் 23.03.2025 அன்று கரூர் திருவள்ளுவர் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் கோலப் போட்டியில் கலந்து கொண்டு அதில் வெற்றி பெறும் முதல் 10 நபர்களுக்கு பரிசுகள் வழங்குவது எனவும் இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

16.03.2025 அன்று காலை 9.00 மணிக்கு கரூர் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் மாபெரும் மருத்துவ முகாம் நடத்துவது எனவும், இக்கூட்டத்தின் வாயிலாக தீர்மானிக்கப்படுகிறது.

மும்மொழிக் கொள்கையை ஏற்கும் வரை தமிழ்நாட்டுக்கு நிதி கிடையாது எனவும், தமிழர்களின் உணர்வுகளை மதிக்காத ஒன்றிய அரசைக் இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

இந்தியை திணிக்கும் மத்திய அரசுக்கு எதிராக 25.02.2025 அன்று திமுக மாணவர் அணி சார்பில் கரூர் மாவட்டத்தில் கரூர் தலைமை தபால் நிலையம் முன்பு நடைபெறும் போராட்டத்தில் பெரும்திரளாக கலந்து கொள்வது என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

48 மாநகராட்சி வார்டுகள், 157 ஊராட்சிகள், நகராட்சி வார்டுகள் 21 இடங்கள், பேரூராட்சி வார்டுகள் 24 இடங்கள் என மொத்தம் 250 இடங்களில் 02.03.2025 அன்று நடத்தப்படும் விளையாட்டுத் திருவிழாவில் முதல் இடம் பெற்று வெற்றி பெறுபவர்களுக்கு மாவட்ட அளவில் 22.03.2025 அன்று கரூர் திருவள்ளுவர் விளையாட்டு மைதானத்தில் நடத்தப்பட்டு அதில் வெற்றி பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு கரூர் மாவட்ட அளவில் கபாடி போட்டி 29.03.2025 சனிக்கிழமை இரவு 8.00 மணிக்கு கரூர் திருவள்ளுவர் விளையாட்டு மைதானத்தில் நடத்துவது என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு கரூர் மாவட்ட அளவில் மாபெரும் கிரிக்கெட் போட்டி கரூர் திருவள்ளுவர் விளையாட்டு மைதானத்தில் 05.04.2025 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு தொடங்கி நடத்துவது என் இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு கரூர் மாவட்ட அளவில் சதுரங்கப் போட்டிகள் 13.04.2025 அன்று நடத்துவது என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு தளபதி அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 27.04.2025 அன்று கரூர் திருவள்ளுவர் விளையாட்டு மைதானத்தில் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடைகள் வழங்குவது என இக்கூட்டம் தீர்மானிக்கிறது என தீர்மானங்கள் நிறை வேற்றப் பட்டன.



தஞ்சை தெற்கு மாவட்டம்,தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மருத்துவர் எஸ்.ஆர். சந்திரசேகர் ஏற்பாட்டில் 47 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டி. பழனிவேல், அண்ணாதுரை எம்.எல்.ஏ, அசோக்குமார் எம்.எல்.ஏ, சா.முரசொலி எம்.பி. ஆகியோர் வழங்கினர். உடன் தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் முன்னேற்ற சங்க பி.ஆர்.ஓ.வீர சரவணன் உள்ளிட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### பல்வேறு துறைகளின் கட்டுப்பாட்டில் இயங்கும்

# நியாய விலைக் கடைகளை ஒருங்கிணைத்து தனித்துறை ஏற்படுத்த வேண்டும்!

## கூட்டுறவு நியாய விலைக் கடை தொ.மு.ச. நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, பிப். 25 -

தமிழ்நாடு கூட்டுறவு நியாய விலைக் கடை தொ.மு.ச. தமிழ்நாடு முழுக்க மாவட்ட நிர்வாகி கள் ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் (23.2.2025) சென்னை தொ.மு.ச. அலுவலகம் கூட்ட அரங்கில் மாநில நியாய விலைக் கடை தொ.மு.ச. பொதுச் செயலாளர் இரா.பொன்னுராம் வரவேற்பில் நடைபெற்றது.

தமிழ்நாடு கூட்டுறவு நியாய விலைக்கடை தொ.மு.ச. வின் மாநில, மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் நேற்று முன்தினம் (23.02.2025 ஞாயிறு) காலை 10.00 மணியளவில் சென்னை தொ.மு.ச. பேரவை தலைமை அலுவலகமான “கலைஞரகத்தில்” சங்கத் தலைவர் எஸ். உமாகாந்தன் தலைமையில் நடை பெற்றது.

இக்கூட்டத்தில் நமது சங்கத்தின் சிறப்புத் தலைவரும் தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளருமான மு.சண்முகம் எம்.பி., பேரவைத் தலைவர் கி.நடராசன், பேரவைப் பொருளாளர் கோ.சி.வள்ளுவன் , பேரவை அலுவலகச் செயலாளர் ஆ.சீ. அருணகிரி, மொத்த விற்பனை பண்டகசாலை பொதுச்செயலாளர் சு. பத்மநாபன் மற்றும் பேரவை நிர்வாகிகளும் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினர். இதனைத் தொடர்ந்து மாவட்டத்திற்கு ஒருவர் விதம் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்து இரா.பொன்னுராம் கூறியதாவது:-

1. பல்வேறு துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் நியாயவிலைக் கடைகளை ஒருங்கிணைத்து தனித்துறை ஏற்படுத்த ஆவன செய்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

2. சமவேலைக்கு சமஊதியம் என்கின்ற கோட்பாட்டில் கூட்டுறவு நியாய விலைக்கடை பணியாளர்களுக்கும் மற்றும் பண்டகசாலைப் பணியாளர்களுக்கும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக பணியாளர்களுக்கு இணையான ஊதியம் வழங்கிட ஆவன செய்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

3. நியாயவிலைக்கடை விற்பனையாளர்களுக்கு வழங்கப்படாமல் நிலுவையில் உள்ள 3% வித்தியாச அகவிலைப்படியினை வழங்கிட ஆவன செய்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

4. பதிவாளர் அவர்கள் உத்தரவின்படி சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்திற்கு விற்பனையாளர்கள் மற்றும் கட்டுநர்களுக்கு ஊக்கத் தொகை குடும்ப அட்டைக்கு ரூ.0.50 பைசா கடந்த 2020 ஆம் ஆண்டு முதல் வழங்கப் பட்டு வருகிறது. மேலும், வரும் காலங்களில் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்திற்கு ஊக்கத்தொகை ஒரு குடும்ப அட்டைக்கு ரூ.3.00ஆக உயர்த்தி வழங்கிட ஆவன செய்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

5. குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் அனைத்து கட்டுப்பாடு பொருட்களையும் எடை குறைவின்றி வழங்கிட ஏதுவாக பொட்டலமிட்டு வழங்கிட ஆவன செய்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

6. சொந்த கட்டிடங்களில் இயங்கிவரும் நியாயவிலைக் கடைகளில் பழுதடைந்த கட்டிடங்களை புதுப்பித்துத் தர வேண்டும் எனவும், மேலும் அனைத்து நியாயவிலை கட்டிடங்களுக்கும் கழிப்பறை வசதி ஏற்படுத்தி தர ஆவன செய்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

7. 1000 குடும்ப அட்டைகள் உள்ள நியாயவிலை கடைகளுக்கு ஒரு கட்டுநர் என்பதை மாற்றி 800 குடும்ப அட்டை உள்ள நியாயவிலை கடைகளுக்கு ஒரு கட்டுநர் நியமனம் செய்திட ஆவன செய்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

8. நியாயவிலை கடைகளில் கட்டுப்பாடற்றப்பொருட்கள் விற்பனைக்கு ஊக்கத்தொகை வழங்கப்படுவதில்லை. எனவே, வரும் காலங்களில் ஊக்கத்தொகை வழங்கிட ஆவன செய்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

9. வசிக்கும் பகுதியிலிருந்து 20கி.மீ அப்பால் பணிபுரியும் நியாயவிலைக் கடை விற்பனையாளர்களுக்கு அவர்கள் வசிக்கும் பகுதியில் உள்ள மற்ற கூட்டுறவு சங்கங்களின் காலிபணியிடத்திற்கு பணி தொடர்ச்சியுடன் பணியிட மாற்றம் செய்திட ஆவன செய்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

10. அரசு அலுவலகங்களுக்கு உள்ளதை போல் நியாயவிலைக் கடைகளுக்கும் அனைத்து ஞாயிற்றுக்கிழமைகளையும் விடுமுறை தினமாக அறிவித்திட ஆவன செய்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

11. மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் பொதுவிநியோகத்திட்டப் பொருட்களை நியாயவிலைக்கடைகளுக்கு நகர்வு செய்திடும் பணிக்கு விளிம்புத் தொகையினை (Margin) அதிகப்படுத்தி வழங்கிட ஆவன செய்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

12. கூட்டுறவு நிறுவனங்கள் நடத்தும் நியாயவிலைக் கடைகளுக்குண்டான பொதுவிநியோகத்திட்ட மானியத் தொகைகளை ஒவ்வொரு நிதியாண்டு முடிந்தவுடன் முழு மானியத் தொகையினையும் விடுவித்திட ஆவன செய்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

13. தற்போது வழங்கப் பட்டு வரும் ஊதியம் நிர்ணயம் செய்து 5 ஆண்டுகள் ஆகிவிட்டபடியால் புதிய ஊதியம் நிர்ணயித்து ஆணை வழங்கிடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.




திருப்பூர் மாநகராட்சி மைய அலுவலக வளாகத்தில் திருப்பூர் மாநகராட்சிக்குச் செலுத்த வேண்டிய சொத்துவரி மற்றும் காலியிட வரியினை பொதுமக்கள் எளிய முறையில் செலுத்தும் வகையில் GPAY, PAYTM, PHONEPE ஆகிய செயலிகளை பயன்படுத்திக் கொள்வதற்கான செயல்முறைகள் அடங்கிய துண்டு பிரசுரங்களை மாநகராட்சி ஆணையாளர் சு.இராமமூர்த்தி தலைமையில் மாநகராட்சி மேயர், திருப்பூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், ந.தினேஷ்குமார் பொதுமக்களிடம் வழங்கி துவக்கி வைத்தார். இதில் மாநகராட்சி ஆணையாளர் சு.இராமமூர்த்தி, துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியம், உதவி ஆணையாளர் கணக்கு (பொ) தங்கவேல் ராஜன் உட்பட பலர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சி.முத்துசாமி
### பிப்ரவரி 25 (2018)



**மாணவப் பருவத்தில் தலைவர் கலைஞர் அவர்களால் ஈர்க்கப்பட்டு, கழக மாணவர் அணியில் சேர்ந்து, பின்னர் மாவட்ட மாணவர் அணி மற்றும் இளைஞர் அணி அமைப்பாளர், வட்டக் கழக பிரதிநிதி, மாவட்டக் கழக பிரதிநிதி, தலைமை செயற்குழு உறுப்பினர், இருமுறை நகர செயலாளர், மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர். கழக தீர்மானக்குழு உறுப்பினராக திறம்பட பணியாற்றி தலைவர் கலைஞர் அவர்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**மாவட்ட ஊராட்சித் தலைவராகவும், அர்பன் கூட்டுறவு வங்கி தலைவராகவும் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**“எத்தனையோ சோதனைகளுக்கும் வேதனைகளுக்கும் இடையில் கழகம் கம்பீரமாக நிற்பதற்கு முத்துசாமி போன்றவர்கள்தான் காரணம்” என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புகழாரம் சூட்டியுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**